

Saidai Duraisamy's
**Manidhanaeyam Free IAS Academy**
(Run by Manidha Naeyam Charitable Trust)
28, 1st Main Road, CIT Nagar, Chennai - 35 (HO).
Mail Address: manidhanaeyam@gmail.com
Website: www.mntfreeias.com

| வினாத்தொகுப்பு எண்: |
|---|
| |

பதிவு எண்: | | | | | | | | | | |

# TNPSC - தொகுதி - IV & VAO தேர்வு - இணைய வழி தொடர் மாதிரி தேர்வு
## இந்த வினாப்புத்தகம்
## பகுதி-அ (பொதுத் தமிழ்) உள்ளடக்கியது

**கால அளவு: ஒரு மணி நேரம் முப்பது நிமிடம்** **மொத்த மதிப்பெண்கள்: 150**

வினாக்களுக்கு பதிலளிக்கும் முன் கீழ்கண்ட அறிவுரைகளை கவனமாகப் படிக்கவும்

## முக்கிய அறிவுரைகள்

1. இந்த வினாத்தொகுப்பு, தேர்வு தொடங்குவதற்கு 15 நிமிடங்களுக்கு முன்னதாக வழங்கப்படும்.
2. இந்த வினாத்தொகுப்பு, 100 வினாக்களைக் கொண்டுள்ளது.
3. விடையளிக்கத் தொடங்கும் முன் இவ்வினாத்தொகுப்பில் எல்லா வினாக்களும் வரிசையாக இடம் பெற்றுள்ளனவா என்பதையும், இடையில் பெற்றுத்தாள்கள் எவையும் இல்லை என்பதையும் உறுதி செய்து கொள்ளவும். வினா தொகுப்பில் ஏதேனும் குறைபாடு இருப்பின், அதனை முதல் பத்து நிமிடங்களுக்குள் அறைக்கண்காணிப்பாளரிடம் தெரிவித்து, சரியாக உள்ள வேறொரு வினாத்தொகுப்பினை பெற்றுக்கொள்ள வேண்டும். தேர்வு தொடங்கிய பின்பு இது குறித்து முறையிட்டால் வினாத் தொகுப்பு மாற்றித் தரப்படமாட்டாது.
4. எல்லா வினாக்களுக்கும் விடையளிக்கவும். எல்லா வினாக்களும் சமமான மதிப்பெண்கள் கொண்டவை.
5. உங்களுடைய பதிவு எண்ணை இந்தப் பக்கத்தின் வலது மேல் மூலையில் அதற்கென அமைந்துள்ள இடத்தில் நீங்கள் எழுத வேண்டும். வேறு எதையும் வினாத்தொகுப்பில் எழுதக்கூடாது.
6. விடைத்தாள் ஒன்று விடைகளை குறிப்பதற்கு அறைக்கண்காணிப்பாளரால். உங்களுக்கு வழங்கப்படும். <u>விடைகளை குறிப்பது உள்ளிட்ட அவசியம் பின்பற்றப்பட வேண்டிய அறிவுரைகள் விடைத்தாளிலும், தேர்வுக்கூட அனுமதிச் சீட்டிலும் வழங்கப்பட்டுள்ளன.</u>
7. உங்களுடைய வினாத்தொகுப்பு எண்ணை (Question Booklet Number) விடைத்தாளின் முதல் பக்கத்தில் அதற்கென அமைந்துள்ள இடத்தில் <u>கருமை நிற மையுடைய பந்துமுனைப் பேனாவினால்</u> குறித்துக்காட்டவேண்டும். வினாத்தொகுப்பு எண்ணை விடைத்தாளில் சரியாகக் குறித்துக் காட்டத் தவறினாலோ அல்லது குறிக்க தவறினாலோ உங்களுடைய விடைத்தாள் செல்லாததாக்கப்படும்.
8. ஒவ்வொரு வினாவும் (A), (B), (C), (D), (E) என ஐந்து பதில்களைக் (விடைகள்) கொண்டுள்ளது. நீங்கள் (A) அல்லது (B) அல்லது (C) அல்லது (D) இவைகளில் ஒரே ஒரு சரியான விடையைத் தேர்வு செய்து விடைத்தாளில் குறித்துக்காட்ட வேண்டும். ஒரு கேள்விக்கு ஒன்றுக்கு மேற்பட்ட சரியான விடை இருப்பதாக நீங்கள் கருதினால், மிகச்சரியானது என நீங்கள் எதைக்கருதுகிறீர்களோ அந்த விடையை விடைத்தாளில் குறித்துக்காட்ட வேண்டும். உங்களுக்கு விடை தெரியவில்லை, எனில், நீங்கள் (E) என்பதை அவசியம் நிரப்பவேண்டும். எப்படியாயினும், ஒரு கேள்விக்கு ஒரே ஒரு விடைதான் தேர்ந்தெடுக்க வேண்டும். நீங்கள் ஒரு கேள்விக்கு ஒன்றுக்கு மேற்பட்ட விடையளித்தால், அவற்றுள் ஒரு விடை சரியானதாக இருந்தாலும் அந்த விடை தவறானதாகவே கருதப்படும்.
9. நீங்கள் வினாத்தொகுப்பின் எந்தப்பக்கத்தையும் நீக்கவோ அல்லது கிழிக்கவோ கூடாது. தேர்வு நேரத்தில் இந்த வினாத்தொகுப்பினையோ அல்லது விடைத்தாளையோ தேர்வு அறையை விட்டு வெளியில் எடுத்துச் செல்லக்கூடாது. தேர்வு முடிந்தபின் நீங்கள் உங்களுடைய விடைத்தாளை கண்காணிப்பாளரிடம் கொடுத்துவிடவேண்டும். இவ்வினாத் தொகுப்பினை தேர்வு முடிந்த பின்னர் மட்டுமே நீங்கள் எடுத்துச் செல்ல அனுமதிக்கப்படுவீர்கள்.
10. குறிப்புகள் எழுதி பார்ப்பதற்கு வினா தொகுப்பின் கடைசி பக்கத்திற்கு முன் உள்ள பக்கங்களை பயன்படுத்திக் கொள்ளலாம். இதைத்தவிர, வினாத்தொகுப்பின் எந்த இடத்திலும் எந்தவித குறிப்புகளையும் எழுதக்கூடாது. இந்த அறிவுரை கண்டிப்பாக பின்பற்றப்படவேண்டும்.
11. நீங்கள் மேற்கண்ட அறிவுரைகளில் எவற்றையாவது பின்பற்ற தவறினால் தேர்வாணையம் எடுக்கும் நடவடிக்கைகளுக்கு உள்ளாக நேரிடும் என அறிவுறுத்தப்படுகிறது.

[Turn over]



Saidai Duraisamy's
Manidhanaeyam Free IAS Academy
(Run by Manidha Naeyam Charitable Trust)
28, 1st Main Road, CIT Nagar, Chennai - 35 (HO).
Mail Address: manidhanaeyam@gmail.com
Website: www.mntfreeias.com

| Question Booklet No: | Register Number: |
|---|---|
| | |

# TNPSC - Group - IV & VAO Exam - Online Test Series

## This Booklet Contains

## Part-A (Tamil Eligibility-Cum-Scoring Test)

**Duration: One Hour Thirty Minutes** **Total Marks : 150**

**Read the following instructions carefully before you begin to answer the questions**

## IMPORTANT INSTRUCTIONS

1. You will be supplied with this question booklet 15 minutes prior to the commencement of the examination.
2. This Question Booklet contains 100 questions.
3. Before answering the questions, you .shall check whether all the questions are printed serially and ensure that there are no blank pages in the question booklet. If any defect is noticed in the question booklet, it shall be reported to the invigilator within the first 10 minutes. and get it· replaced with a complete question booklet. If the defect is reported after the commencement of the examination, it will not be replaced.
4. Answer all the questions. All the questions carry equal marks.
5. You must write your Register Number in the space provided on the top right side of this page. Do not write anything else on the Question Booklet.
6. An answer sheet will be supplied to you separately by the room invigilator to shade the answers. Instructions regarding filling of answers etc., which are to be followed mandatorily, are provided in the answer sheet and in the mem”oranduin of admission (Hall Ticket).
7. You shall write and shade your question booklet number in the space provided on page one of the answer sheet with BLACK INK BALL POINT PEN. If you do not shade correctly or fail to shade the question booklet number, your answer sheet will be invalidated.
8. Each question comprises of five responses (answers) : i.e. (A), (B), (C), (D) and (E). You have to select ONLY ONE correct answer from (A) or (B) or (C) or (D) and shade the same in your answer sheet. If you feel that there are more than one 90rrect answer, shade the one which you consider the best. If you do not know the answer, you have to mandatorily shade (E). In any case, choose ONLY ONE answer for each question. If you shade more than one answer for a question, it will be treated as a wrong answer even if one of the given answers happens to be correct.
9. You should not remove or tear off any sheet from this Question Booklet.You are not allowed to take this Question Booklet and the Answer Sheet out of the Examination Room during the time of examination. After the examination. you must hand over your Answer Sheet to the Invigilator. You are allowed to take the Question Booklet with you only after the Examination is over.
10. You should not make any marking in the question booklet except in the sheets before the last page of the question booklet, which can be used for rough work. This should be strictly adhered to.
11. Failure to comply with any of the above instructions will render you liable for such action as the Commission may decide at their discretion.

[Turn over]

## பகுதி-அ - பொது தமிழ்
## Part-A- General Tamil
### 8 ஆம் வகுப்பு – தொகுதி - 3

வினாக்கள் : 1 - 100 மொத்த மதிப்பெண்கள் : 150
Questions : 1 - 100 Total Marks : 150

1. கடவுளும் கந்தசாமிப்பிள்ளையும் என்ற நூலின் ஆசிரியர் ............
   (A) புதுமைப்பித்தன்
   (B) மு. மேத்தா
   (C) மீ. ராசேந்திரன்
   (D) திரு.வி.க

2. “சுயராஜ்ஜியத்தின் நோக்கம் அதிகாரத்தைக் கைப்பற்றுவதாக மட்டும் இருக்கக்கூடாது, மக்களின் சமூக பொருளாதார வளர்ச்சியையும் உள்ளடக்கியதாக அஃது அமையவேண்டும். மக்கள் வாழ்க்கையில் மாற்றம் உண்டால் ஒழிய நாடு முன்னேறமுடியாது” என்று ஆணித்தரமாகக் கூறியவர் ............
   (A) பாலகங்காதர திலகர்
   (B) காந்தியடிகள்
   (C) அம்பேத்கர்
   (D) அயோத்திதாசர்

3. ‘வானம் பொய்ப்பதற்குக் காரணம் ஒழுக்கமுள்ள ஞானிகள் இல்லாமையே. ஞானிகள் இல்லாமைக்குக் காரணம் நீதியும் நெறியும் வாய்மையும் நிறைந்த அறிவாளிகள் இல்லாமையாகும். அறிவாளிகள் இல்லாமைக்குக் காரணம் ஆட்சித்திறனும் அன்பும் உடைய அரசர்கள் இல்லாமையே. அத்தகைய அரசர்கள் இல்லாமைக்குக் காரணம் கல்வி, அறிவு, அருள், ஒழுக்கம், ஒற்றுமை ஆகியன உடைய குடிகள் இல்லாமையே என்றும் நல்ல குடிமக்கள் இல்லாத நாட்டுக்கு இயற்கைகூட உதவாது என்றவர் ..................
   (A) அயோத்திதாசர்
   (B) தந்தைபெரியார்
   (C) டாக்டர் மு.வ
   (D) அறிஞர் அண்ணா

4. இவ்வே, பீலி அணிந்து மாலை சூட்டிக்
கண்திரள் நோன் காழ் திருத்தி நெய் அணிந்து
கடி உடை வியன் நகர் அவ்வேஎ அவ்வே
பகைவர்க் குத்திக் கோடு நுதி சிதைந்து
கொல் துறைக் குற்றிலமாதோ என்றும்
உண்டாயின் பதம் கொடுத்து
இல்லாயின் உடன் உண்ணும்
இல்லோர் ஒக்கல் தலைவன்
அண்ணல் எம் கோமான் வைந்நுதி வேலே - இப்பாடலைப் பாடிய புலவர் யார்?
(A)கபிலர்
(B)ஔவையார்
(C)தனிமகனார்
(D)ஒக்கூர் மாசாத்தியார்

5. எம்.ஜி.ஆர் பிறந்த ஊர் ...................
(A) காஞ்சிபுரம்
(B) கண்டி
(C) கும்பகோணம்
(D) ஸ்ரீபெரும்பூதூர்

6. ஐந்தாம் உலகத் தமிழ்நாடு நடைபெற்ற இடம் ...........
(A) சென்னை
(B) மதுரை
(C) கோவை
(D) திருச்சி

7. ‘குக்கூ’ என்ற நூலின் ஆசிரியர் யார்?
(A) பாவண்ணன்
(B) புதுமைப்பித்தன்
(C) மீ.ரா
(D) மு. மேத்தா

8. செயங்கொண்டார் யாருடைய அவையில் அவைகளப் புலவராகத் திகழ்ந்தார்?
(A) முதல் குலோத்துங்க சோழன்
(B) விஜயாலய சோழன்
(C) முதலாம் பராந்தகச் சோழன்
(D) முதலாம் இராஜேந்திர சோழன்

9. எம்.ஜி. ஆருக்கு பாரத ரத்னா விருது வழங்கப்பட்ட ஆண்டு ............
(A) 1990
(B) 1999
(C) 1987
(D) 1988

10. கள்ளக் கருத்துகளைக் கட்டோடு அறுத்தவருக்கு உள்ளிருக்கும் மெய்ஞ்ஞான ஒளியே எனப் பாடியவர்
(A) திருமூலர்
(B) குணங்குடி மஸ்தான் சாகிபு
(C) திருத்தணி சரவணப் பெருமாள்
(D) தாயுமானவர்

11. கான முயல்எய்த அம்பினில் யானை
பிழைத்தவேல் ஏந்தல் இனிது - இக்குறட்பாவில் இடம்பெற்றுள்ள அணி யாது?
(A) எடுத்துக்காட்டு உவமையணி
(B) பிறிதுமொழிதல் அணி
(C) வேற்றுமையணி
(D) உவமையணி

12. ஆண்டாள் இயற்றிய 'திருப்பாவையைத்' தழுவி 'கன்னிப்பாவை' என்னும் நூலை எழுதியவர் யார்?
(A) இறையரசன்
(B) முகமது மேத்தா
(C) புதுமைப் பித்தன்
(D) மீ. ராசேந்திரன்

13. 'பரணிக்கோர் செயங்கொண்டார்'; என்று செயங்கொண்டாரைப் புகழ்ந்தவர் யார்?
(A) காளமோகப் புலவர்
(B) ஒட்டக்கூத்தர்
(C) முதலாம் குலோத்துங்கன்
(D) பலப்பட்டடைச் சொக்கநாதர்

14. 'ஒரு நாள் கழிந்தது' என்ற சிறுகதையின் ஆசிரியர் யார்?
(A) புதுமைப்பித்தன்
(B) இறையரசன்
(C) தேனரசன்
(D) மு. மேத்தா

15. எழுத்துகள் ஒன்றோ சிலவோ சேர்வது .......... ஆகும்.

(A) அசை

(B) தளை

(C) சீர்

(D) தொடை

16. கடலோடா கால்வல் நெடுந்தேர் கடலோடும்
நாவாயும் ஓடா நிலத்து - இக்குறட்பாவில் பயின்று வந்துள்ள அணி யாது?

(A) உவமையணி

(B) எடுத்துக்காட்டு உவமையணி

(C) பிறிது மொழிதல் அணி

(D) வேற்றுமையணி

17. சமத்துவச் சமுதாயம் அமைய அம்பேத்கர் ஏற்படுத்திய இயக்கம் .........

(A) சுதந்திர தொழிலாளர் கட்சி

(B) ஒடுக்கப்பட்டோர் நல்வாழ்வு

(C) சமாஜ் சமாத சங்கம்

(D) திராவிட மகாஜன சங்கம்

18. புறாமலை, நாகமலை, சதுரகிரி முதலிய மலைப்பகுதிகளில் தவம் இயற்றி தனித்திருந்து ஞானம் பெற்றவர் .............

(A) தாயுமானவர்

(B) திருத்தணி சரவணப்பெருமாள்

(C) குன்றக்குடி அடிகளார்

(D) குணங்குடி மஸ்தான் சாகிப்

19. தமது கொள்கைகளை வலியுறுத்தவும் ஒடுக்கப்பட்டோர் உரிமைகளைப் பாதுகாக்கவும் 1892 ஆம் ஆண்டு திராவிட மகாஜன சங்கம் என்னும் அமைப்பைத் தோற்றுவித்தவர் யார்?

(A) அயோத்திதாசர்

(B) பெரியார்

(C) அம்பேத்கர்

(D) இரட்டைமலை சீனிவாசன்

20. இலக்கண பிழையற்ற கூற்றைக் கண்டறிக
    1. தலைவர் தமது கையால் பரிசு வழங்கினார்.
    2. அம்பேத்கர் ஒடுக்கப்பட்ட மக்களின் அயர்வுக்காகத் தனது உழைப்பை நல்கினார்.
    3. இவை தான் எனக்குப் பிடித்த நூல்கள்.
    4. குழந்தைகள் தன்னால் இயன்ற உதவிகளைப் பிறருக்குச் செய்கின்றனர்.

(A) 1, 4
(B) 1 மட்டும்
(C) 1, 2, 3, 4
(D) 2, 3

21. இந்திய அரசியலமைப்புச் சட்டத்தை எழுத அம்பேத்கர் தலைமையில் ஏழு பேர் கொண்ட அரசியலமைப்புச் சட்ட வரைவுக்குழு உருவாக்கப்பட்ட நாள்.

(A) 1949 ஆகஸ்டு 27
(B) 1947 ஆகஸ்டு 29
(C) 1947 ஆகஸ்டு 17
(D) 1947 ஆகஸ்டு 30

22. அம்பேத்கர் தாம் வணங்கும் தெய்வங்கள் மூன்று எனக் கூறினார். அவற்றுள் பின்வரும் எந்தவொன்று இல்லை?

(A) மரியாதை
(B) அறிவு
(C) நன்னடத்தை
(D) சுயமரியாதை

23. பின்வரும் திருக்குறளின் ஈற்றடியைத் தேர்வுசெய்க.
பண்புடையார்ப் பட்டுஉண்டு உலகம் அதுஇன்றேல்

(A) மண்புக்கு மாய்வது மன்
(B) கலந்தீமை யால்திரிந் தற்று
(C) தான்சாம் துயரம் தரும்
(D) பண்புடை யாளர் தொடர்பு

24. ‘பகுத்தறிவு’ என்ற சொல்லின் ஆங்கில கலைச்சொல்லை கண்டறிக.

(A) Dignity
(B) Reform
(C) Rational
(D) Integrity

25. தூங்கி விழுந்தால் பூமி உனக்குப் படுக்கையாகிறது. விழித்து நடந்தால் அதுவே உனக்குப் பாதையாகிறது! - இக் கவிதையின் ஆசிரியர் யார்?
(A) முகமது மேத்தா
(B) இறையரசன்
(C) மீ. ராசேந்திரன்
(D) தாராபாரதி

26. அம்பேத்கர் பாரிஸ்டர் பட்டம் பெற்ற ஆண்டு ..........
(A) 1921
(B) 1924
(C) 1923
(D) 1925

27. ஆண்மையின் கூர்மை என்று எதைத் திருவள்ளுவர் கூறுகிறார்?
(A) பெரிய முயற்சி
(B) பகைவருக்கு துன்பம் வரும்போது, உதவிசெய்தல்
(C) பகைவரை எதிர்த்து நிற்கும் வீரம்
(D) குன்றிமணியளவு செய்த உதவியை பனையளவாக கொள்ளுதல்

28. இலக்கண பிழையற்ற தொடரைக் கண்டறிக.
1. மாணவன் தனது கையால் பெற்றுக் கொண்டான்
2. மாடுகள் தமது தலையை ஆட்டின
3. கன்று தனது தலையை ஆட்டியது
4. உயர்ந்தோர் தன்னைத்தானே புகழ்ந்து கொள்ள மாட்டார்கள்
(A) அனைத்தும்
(B) 2, 3, 4
(C) 1, 2, 3
(D) 1, 3, 4

29. 'நிலாக்கால நட்சத்திரங்கள்' என்ற நூலின் ஆசிரியர் ............
(A) கோமகள்
(B) இறையரசன்
(C) மு. மேத்தா
(D) ஆலங்குடி சோமு

30. அம்பேத்கர் பொருளாதாரப் படிப்பிற்காக இலண்டன் சென்ற ஆண்டு ..........
(A) 1920
(B) 1915
(C) 1923
(D) 1921

31. அசை எத்தனை வகைப்படும்?
(A) 3
(B) 2
(C) 4
(D) 6

32. தென்னிந்திய சமூக சீர்திருத்தத்தின் தந்தை என்று போற்றப்பட்டவர் யார்?
(A) அயோத்திதாசர்
(B) பெரியார்
(C) முத்துராமலிங்க தேவர்
(D) அறிஞர் அண்ணா

33. 'மனோன்மணிக் கண்ணி' என்ற நூலை இயற்றியவர்.
(A) திருமூலர்
(B) தாயுமானவர்
(C) இராமலிங்க அடிகளார்
(D) குணங்குடி மஸ்தான் சாகிபு

34. பிழைகளற்ற தொடரைக் ஃ தொடர்களைக் கண்டறிக.
1. பானையை உடைத்தது முருகன் அல்லன்
2. அதைச் செய்தது நான் அன்று
3. பகைவர் நீவீர் அல்லீர்
4. சித்தர்கள் செயற்கையை விரும்பியவர்கள்
(A) 1, 4
(B) 1, 3, 4
(C) 1, 2, 3
(D) 2, 4

35. மூன்று இடத்திற்கும், ஐந்து பாலுக்கும் பொதுவான சொற்கள் உள்ளன. அவற்றுள் பொருந்தாததைக் கண்டறிக.
(A) அன்று
(B) உண்டு
(C) இல்லை
(D) வேறு

36. திருமூலர் எழுதிய திருமந்திரம் சைவத்திருமுறைகளில் எத்தனையாவது திருமுறையாக வைக்கப்பட்டுள்ளது?
(A) 9
(B) 12
(C) 10
(D) 11

37. பின்வரும் தொடர்களை வல்லினம் மிகும், மிகா இடங்கள் தொடர்பானதில் சரியான இணை / இகைளைக் கண்டறிக.
    1. நான்காம் வேற்றுமை விரி - மிகும்.
    2. உருவகம் - மிகாது
    3. உகரத்தில் முடியும் வினையெச்சங்கள் வன்தொடர் குற்றியலுகரமாக இருந்தால் - மிகும்
    4. எதிர்மறைப் பெயரெச்சம் - மிகாது

    (A) அனைத்தும்
    (B) 1, 3, 4 சரி
    (C) 1, 2, 4 சரி
    (D) 1, 2, 3 சரி

38. எம்.ஜி. ஆருக்கு அழியாத புகழைத் தேடித் தந்த திட்டம்
    (A) இலவசக் காலணி வழங்கும் திட்டம்
    (B) இலவச சீருடை வழங்கும் திட்டம்
    (C) சத்துணவுத் திட்டம்
    (D) வீட்டுவசதித் திட்டம்

39. 'வா இந்தப் பக்கம்' என்ற நூலின் ஆசிரியர் யார்?
    (A) மீ. இராசேந்திரன்
    (B) வெ. இறையன்பு
    (C) மு. மேத்தா
    (D) இறையரசன்

40. கலிங்கத்து பரணியில் உள்ள தாழிசைகள் எத்தனை?
    (A) 519
    (B) 509
    (C) 529
    (D) 599

41. சரியான இணைகளைக் கண்டறிக.
    1. திசைப்பெயர்களை அடுத்து வல்லினம் - மிகும்
    2. எழுவாய்ச் சொற்களை அடுத்து வல்லினம் - மிகாது
    3. வினைத் தொகையில் வல்லினம் - மிகும்
    4. சுட்டுத் திரிபு வரும்போது வல்லினம் - மிகும்

    (A) 1, 2, 3
    (B) 1, 2, 4
    (C) 2, 3, 4
    (D) 1, 3, 4

42. பிழைகளற்ற தொடரைக் கண்டறிக.

1. மல்லிகை குளத்தில் பூக்கும் மலர் அல்ல.
2. தாங்கள் படிக்கவேண்டிய புத்தகங்கள் இவை அல்ல.
3. உங்களோடு வருவோர் நாம் அல்லோம்.
4. மொய்த்த பண்டங்கள் உடலுக்கு நன்மை செய்வன அல்ல.

(A) 2, 3, 4
(B) 1, 3, 4
(C) 1, 2, 4
(D) 1, 2, 3

43. ….. …. …..
நன்றே நினைமின் நமனில்லை நாணாமே
சென்றே புகும்கதி இல்லைநும் சித்தத்து
நின்றே நிலைபெற நீர்நினைந்து உய்ம்மினே ….
என்று பாடியவர்

(A) திருமூலர்
(B) மாணிக்கவாசகர்
(C) ஆண்டாள்
(D) திருநாவுக்கரசர்

44. 'நந்தீசுவரக் கண்ணி' என்ற நூலின் ஆசிரியர் யார்?

(A) குணங்குடி மஸ்தான் சாகிபு
(B) தாயுமானவர்
(C) மு. மேத்தா
(D) கோமகள்

45. தம் பகுத்தறிவுப் பிரச்சாரத்திற்கும் சீர்திருத்தக் கருத்துகளுக்கும் முன்னோடிகளாகத் திகழ்ந்தனர் என்று பெரியார் எவர்களை குறிப்பிட்டார்?

(A) தேவநேயப் பாவாணரும் அம்பேத்கரும்
(B) அயோத்திதாசரும் முத்துராமலிங்கரும்
(C) அயோத்திதாசரும் அப்பாதுரையாரும்
(D) அயோத்திதாசரும் அம்பேத்கரும்

46. 'ஒரு நாள் கழிந்தது' என்ற நூலின் ஆசிரியர் யார்?

(A) மு.மேத்தா
(B) கோமகள்
(C) புதுமைப்பித்தன்
(D) இறையரசன்

47. தொடை --------------- வகைப்படும்.
   (A) 7
   (B) 8
   (C) 6
   (D) 4

48. பண்பிலான் பெற்ற பெருஞ்செல்வம் நன்பால்
   கலம்தீமை யால்திரிந் தற்று - இக்குறட்பாவில் பயின்று வந்துள்ள அணி யாது?
   (A) உவமையணி
   (B) உருவக அணி
   (C) எடுத்துக்காட்டு உவமையணி
   (D) நிரல்நிரையணி

49. சரியான இணைகளைக் கண்டறிக.
   1. இகல் - பகை
   2. மையல் - விருப்பம்
   3. ஓர்ப்பு - ஆராய்ந்து தெளிதல்
   4. பொச்சாப்பு - சோர்வு
   (A) 1, 2, 3
   (B) 1, 2, 3, 4
   (C) 2, 3 மட்டும்
   (D) 1, 2 மட்டும்

50. கவலைகளைத் தூக்கிக்கொண்டு
   திரியாதே ...
   அவை
   கைக்குழந்தைகளல்ல ... எனறு பாடிய கவிஞர்
   (A) மு. மேத்தா
   (B) சே. பிருந்தா
   (C) கோமகள்
   (D) இறையரசன்

51. அம்பேத்கர் பிறந்த நாள் .....
   (A) 1891 மே 14
   (B) 1891 மார்ச் 14
   (C) 1891 ஏப்ரல் 14
   (D) 1891 மே 14

52. தீயினாற் சுட்டபுண் உள்ளாறும் ஆறாதே
நாவினாற் சுட்ட வடு - இக்குறட்பாவில் பயின்றுவரும் அணி யாது?
(A) வேற்றுப்பொருள் வைப்பணி
(B) வேற்றுமையணி
(C) உவமையணி
(D) உருவக அணி

53. அயோத்திதாசர் பதிப்பித்த நூல்களுள் எது எது இல்லை எனக் கண்டறிக.
(A) அகத்தியர் இருநூறு
(B) சிமிட்டு இரத்தினச் சுருக்கம்
(C) போகர் எழுநூறு
(D) இந்திர தேச சரித்திரம்

54. சரியான இணைகளைக் கண்டறிக.

| | | |
|---|---|---|
| 1. மறலி | - | யானை |
| 2. பிலம் | - | மலைக்குகை |
| 3. வழிவர் | - | நழுவி ஓடுவர் |
| 4. மண்டுதல் | - | சினத்தல் |

(A) அனைத்தும் சரி
(B) 2, 3 மட்டும் சரி
(C) 2, 3, 4 சரி
(D) 1, 3, 4 சரி

55. கலிங்கத்து பரணியை 'தென்தமிழ்த் தெய்வப்பரணி' என்று புகழ்ந்தவர் ............
(A) ஒட்டக்கூத்தர்
(B) அறிஞர் அண்ணா
(C) பலபட்டடைச் சொக்கநாதர்
(D) காளமேகப் புலவர்

56. சரியான இணைகளைக் கண்டறிக

| | | |
|---|---|---|
| 1. தன்மை ஒருமை | - | நான் அல்லேன் |
| 2. முன்னிலை ஒருமை | - | நீ அல்லை |
| 3. படர்க்கை பலர்பால் | - | அவர் அல்லர் |
| 4. படர்க்கை பலவின்பால் | - | அவை அல்ல |

(A) 1, 2, 3, 4 மட்டும் சரி
(B) 2, 4 மட்டும்
(C) 1, 3 மட்டும்
(D) 1, 4 மட்டும்

57. படமாடக் கோயில் பகவற்குஒன்று ஈயில்
நடமாடக் கோயில் நம்பர்க்குஅங்கு ஆகா
நடமாடக் கோயில் நம்பர்க்குஒன்று ஈயில்
படமாடக் கோயில் பகவற்குஅது ஆமே – என்று பாடியவர் யார்?
(A) ஆண்டாள்
(B) திருநாவுக்கரசர்
(C) மாணிக்கவாசகர்
(D) திருமூலர்

58. காசை விரும்பிக் கலங்கிநின்று உன்பாத
ஆசை விரும்பாது அலைந்தேன் ... எனப் பாடியவர் யார்?
(A) திருமூலர்
(B) குணங்குடி மஸ்தான் சாகிபு
(C) வள்ளலார்
(D) மாணிக்கவாசகர்

59. அயோத்திதாசர் ஒருபைசாத்தமிழன் என்னும் வார இதழை காலணா விலையில் 1907 ஆம் ஆண்டு தொடங்கினார். ஓர் ஆண்டிற்குப்பின் அவ்விதழின் பெயரை .......... என மாற்றினார்?
(A) சமத்துவம்
(B) தமிழர் வேதம்
(C) தமிழ்நாடு
(D) தமிழன்

60. அயோத்திதாசர் பெயரில் எங்கு சித்த மருத்துவமனை மற்றும் ஆராய்ச்சிக் கூடம் அமைந்துள்ளது?
(A) சென்னை - மணலி
(B) சென்னை – தாம்பரம்
(C) சென்னை – பெரம்பூர்
(D) சென்னை - பாரிமுனை

61. சிறுகதை மன்னன் என்று போற்றப்பட்டவர் .............
(A) முகமது மேத்தா
(B) அப்துல் ரகுமான்
(C) புதுமைப்பித்தன்
(D) மறைமலையடிகள்

62. சிறியிலை நெல்லித் தீங்கனி குறியாது, ஆதல் நின்னகத்து அடக்கிச்,சாதல் நீங்க, எமக்கு ஈத்தனையே - இப்பாடலைப் பாடிய புலவர் யார்?

(A)கபிலர்

(B)ஔவையார்

(C)தனிமகனார்

(D)ஒக்கூர் மாசாத்தியார்

63. சாகும் அளவுக்குத் துன்பம் தருவது எதுவென திருவள்ளுவர் கூறுகிறார்?

(A) ஆராய்ந்து பாராமல் ஒருவனுடன் கொண்ட நட்பு

(B) அறிவில்லாதவருடன் கொண்ட நட்பு

(C) முகம் மட்டும் மலரும் படியாக நட்பு செய்வது

(D) இனம் போலவே இருந்து உண்மையில் இனம் இல்லாதவருடன் கொண்ட நட்பு.

64. எங்களை முன்னம் எழுப்புவான் வாய்பேசும்
நங்காய் ! எழுந்திராய், நாணாதாய் ! நாவுடையாய் !
சங்கொடு சக்கரம் ஏந்தும் தடக்கையான்
பங்கயக் கண்ணானைப் பாடேலோ ரெம்பாவாய்
இப்பாடல் திருப்பாவையின் எத்தனையாவது பாடலாகும்?

(A) 11 ஆவது

(B) 10 ஆவது

(C) 13 ஆவது

(D) 14 ஆவது

65. நீ
விழித்தெழும் திசையே
பூமிக்குக் கிழக்கு
உன்
விரல்களில் ஒளிரும்
சூரியவிளக்கு – என்று பாடியவர்

(A) தாராபாரதி

(B) புதுமைப்பித்தன்

(C) மு. மேத்தா

(D) மீ. ராசேந்திரன்

66. வஞ்சிப்பா ......... ஓசை உடையது.

(A) அகவலோசை

(B) தூங்கலோசை

(C) துள்ளலோசை

(D) செப்பலோசை

67. பின்வரும் நூல்களுள் அயோத்திதாசர் எழுதாத நூல் எது?
(A) புத்தர் சரித்திரப்பா
(B) பாலவாகடம்
(C) ஆதிவேதம்
(D) விவாக விளக்கம்

68. சரியான எதிர்மறைச் சொல்லைக் கண்டறிக. இந்த நிலத்துக்கு உரிமையாளர் நீ .............
(A) அன்று
(B) அல்ல
(C) அல்லன்
(D) அல்லை

69. சரியான இணைகளைக் கண்டறிக.
1. உம்மைத் தொகையில் வல்லினம் - மிகும்
2. பெயரெச்சத்தில் வல்லினம் - மிகாது
3. எண்ணுப்பெயர்களில் எட்டு, பத்து ஆகிய இரண்டு பெயர்களில் மட்டும் வல்லினம் - மிகும்
4. ஈறுகெட்ட எதிர்மறைப் பெயரெச்சத்தில் வல்லினம் - மிகும்.
(A) 2, 3, 4 சரி
(B) 1, 3, 4 சரி
(C) 1, 2, 4 சரி
(D) 1, 2, 3 சரி

70. எம்.ஜி ஆருக்கு டாக்டர் பட்டம் வழங்கிய பல்கலைக் கழகம் எது?
(A) சென்னைப் பல்கலைக்கழகம்
(B) அண்ணாமலைப் பல்கலைக்கழகம்
(C) தஞ்சை தமிழ் பல்கலைக்கழகம்
(D) பாரதிதாசன் பல்கலைக்கழகம்

71. ஔவைக்கு, வில், அம்பு, வேல், ஈட்டி, வாள், கேடயம், மழு என பலவகையான கருவிகள் வைக்கப்பட்ட பெரிய படைக்கலக் கொட்டிலைக் காண்பித்த மன்னன் யார்?
(A) தொண்டைமான் இளந்திரையான்
(B) அதியமான்
(C) நலங்கிள்ளி
(D) நெடுங்கிள்ளி

72. சரியான இணைகளைக் கண்டறிக.

| | | |
|---|---|---|
| 1. சுட்டுத்திரிபுகளை அடுத்து வல்லினம் | - | மிகும் |
| 2. இரண்டாம் வேற்றுமை விரியில் வல்லினம் | - | மிகும் |
| 3. வினாத்திரியை அடுத்து வல்லினம் | - | மிகும் |
| 4. எழுவாய்ச் சொற்களை அடுத்து வல்லினம் | - | மிகாது |

(A) 1, 2, 4 சரி
(B) 1, 2, 3 சரி
(C) 1, 3, 4 சரி
(D) 1, 2, 3, 4 சரி

73. அறிவை அறிவோருக்கு ஆனந்த வெள்ளமதாய்க் கரையறவே பொங்கும் கடலே – என்று பாடியவர் யார்?
(A) திருமூலர்
(B) குணங்குடி மஸ்தான் சாகிபு
(C) தாயுமானவர்
(D) திருநாவுக்கரசர்

74. திருவள்ளுவர், ஔவையார் ஆகியோரின் படைப்புகளுள் பௌத்தக் கோட்பாடுகளின் அடிப்படையில் புதிய விளக்கங்களை எழுதியுள்ளவர் யார்?
(A) சி.வை. தாமோதரனார்
(B) இரா. இளங்குமரனார்
(C) அயோத்திதாசனார்
(D) ஆறுமுகநாவலர்

75. சிறுகதைகளில் புதுப்புது உத்திகளைக் கையாண்டவர் யார்,
(A) மௌனி
(B) புதுமைப்பித்தன்
(C) சுஜாதா
(D) கு.ப. இராஜகோபாலன்

76. எழுத்துகள் தனியாகவோ சேர்ந்தோ வருவது ............ ஆகும்.
(A) சீர்
(B) தொடை
(C) அசை
(D) தளை

77. அடி ............. வகைப்படும்.
(A) 5
(B) 6
(C) 4
(D) 8

78. நகுதல் பொருட்டன்று நட்டல் மிகுதிக்கண்
மேற்சென்று இடித்தல் பொருட்டு - இத்திருக்குறளில் அடிக்கோடிட்ட வார்த்தையின் பொருள் யாது?
(A) நட்பு கொள்ளுதல்
(B) சினம் கொள்ளுதல்
(C) சிரித்தல்
(D) துன்பம்

79. நாசிக் கோயில் நுழைவுப் போராட்டத்தினை அம்பேத்கர் நடத்திய ஆண்டு .........
(A) 1935
(B) 1930
(C) 1932
(D) 1934

80. 'மீதமிருக்கும் சொற்கள்' என்ற நூலின் ஆசிரியர் ...........
(A) சே. பிருந்தா
(B) இராஜமார்த்தாண்டன்
(C) அ. வெண்ணிலா
(D) இறையரசன்

81. காந்தியடிகளுக்கும் அம்பேத்கருக்கும் இடையே 'பூனா ஒப்பந்தம்' செய்யப்பட்ட நாள் ......... ஆகும்.
(A) 1932 செப்டம்பர் 24
(B) 1930 செப்டம்பர் 24
(C) 1931 செப்டம்பர் 24
(D) 1935 செப்டம்பர் 24.

82. சரியான இணைகளைக் கண்டறிக.
1. இந்தியாவில் சாதிகளின் தோற்றமும் வளர்ச்சியும் என்னும் தலைப்பில் ஆய்வுக் கட்டுரை ஒன்றைப் படைத்தவர் அம்பேத்கர் ஆவார்.
2. 1934 ஆம் ஆண்டு ஒடுக்கப்பட்ட மக்களின் முன்னேற்றத்திற்காக ஒடுக்கப்பட்டோர் நல்வாழ்வுப் பேரவை என்ற அமைப்பை நிறுவியவர் அம்பேத்கர்.
3. அம்பேத்கர் 1915 இல் பண்டைக்கால இந்திய வணிகம் என்ற ஆய்விற்காக முதுகலைப் பட்டம் பெற்றார்.
4. இந்தியாவின் தேசியப்பங்கு வீதம் என்ற ஆய்வுக்காக கொலம்பியா பல்கலைக்கழகம் அம்பேத்கருக்கு முனைவர் பட்டம் வழங்கியது.

(A) 2, 3, 4 சரி
(B) 1, 2, 3, 4 சரி
(C) 1, 3, 4 சரி
(D) 1, 2, 4 சரி

83. அம்பேத்கர் 'ரூபாய் பற்றிய பிரச்சனை' என்னும் ஆராய்ச்சிக் கட்டுரைக்காக முனைவர் பட்டர் பெற்ற ஆண்டு..........
(A) 1923
(B) 1920
(C) 1925
(D) 1921

84. அம்பேத்கர் 'ஒடுக்கப்பட்ட பாரதம்' என்ற இதழைத் தொடங்கிய ஆண்டு ...............
(A) 1925
(B) 1927
(C) 1929
(D) 1928

85. 'சாபவிமோசனம்' என்ற சிறுகதையின் ஆசிரியர் ..........
(A) மு. மேத்தா
(B) கு. ப. ராஜகோபாலன்
(C) சுஜாதா
(D) புதுமைப்பித்தன்

86. ஓடிவந்து கைகுலுக்க
ஒருவருமில்லையா?
உன்னுடன் நீயே
கைகுலுக்கிக் கொள் ....... எனப் பாடியவர்
(A) மு. மேத்தா
(B) மீரா
(C) ஆலங்குடி சோமு
(D) தாராபாரதி

87. 'உயர்நிலையும் இடைநிலையும்' கடைநிலையும் பாகுபடுத்தி அறியமுடியாத மக்களுக்கு நீதி, நேர்மை, சரியான பாதை ஆகியவற்றைத் தெளிவுபடுத்துவதே தமிழன் இதழின் நோக்கம் என்று குறிப்பிட்டவர் ...................
(A) அம்பேத்கர்
(B) பெரியார்
(C) அயோத்திதாசர்
(D) அறிஞர் அண்ணா

88. ‘கண்ணீர் பூக்கள்’ என்ற நூலின் ஆசிரியர் ............

(A) மு. மேத்தா

(B) சே. பிருந்தா

(C) இறையரசன்

(D) புதுமைப்பித்தன்

89. 1930 ஆம் ஆண்டு இங்கிலாந்தில் நடைபெற்ற முதலாவது வட்டமேசை மாநாட்டில் அம்பேத்கரோடு தமிழ்நாட்டிலிருந்து கலந்துகொண்டவர் யார்?

(A) சுப்பிரமணிய சிவா

(B) விஸ்வநாத தாஸ்

(C) இரட்டைமலை சீனிவான்

(D) நீலகண்ட பிரம்மச்சாரி

90. அம்பேத்கரின் ‘புத்தரும் அவரின் தம்மமும்’ என்னும் புத்தகம் வெளியான ஆண்டு ...........

(A) 1956

(B) 1957

(C) 1959

(D) 1958

91. உவமையை மட்டும் கூறி அதன் மூலம் கூறவந்த கருத்தை உணரவைப்பது ............ அணி ஆகும்.

(A) எடுத்துக்காட்டு உவமையணி

(B) உருவக அணி

(C) வேற்றுமையணி

(D) பிறிது மொழிதல் அணி

92. கலிப்பா .......... ஓசையை உடையது

(A) தூங்கலோசை

(B) துள்ளலோசை

(C) அகவலோசை

(D) செப்பலோசை

93. எம்.ஜி.ஆர் அவர்களைப் 'பொன்மனச் செம்மல்' என்று அழைத்தவர்/அழைத்தவர்கள் யார்?

(A) மக்கள்

(B) அறிஞர் அண்ணா

(C) காமராசர்

(D) அயோத்தி தாசர்

94. 'மூன்றும் ஆறும்' என்ற நூலின் ஆசிரியர் யார்?

(A) புதுமைப்பித்தன்

(B) இறையரசன்

(C) மீ. இராசேந்திரன்

(D) தேனரசன்

95. கோமகளின் எந்நூல் தமிழ்நாடு அரசின் விருதினைப் பெற்றது?

(A) அன்பின் சிதறல்

(B) அன்னை பூமி

(C) தமிழ் அன்னை

(D) உயிர் அமுதாய்

96. இருபொருள்களுக்கு இடையே உள்ள ஒற்றுமையைக் கூறி, பிறகு அவற்றுள் ஒன்றை வேறுபடுத்திக் காட்டுவது ........... அணி.

(A) வேற்றுமையணி

(B) வேற்றுப்பொருள் வைப்பணி

(C) எடுத்துக்காட்டு உவமையணி

(D) உவமையணி

97. முகமது மேத்தா பின்வரும் எந்நூலுக்காக சாகித்திய அகாடமி விருது பெற்றார்?

(A) கண்ணீர் பூக்கள்

(B) ஊர்வலம்

(C) ஆகாயத்துக்கு அடுத்த வீடு

(D) மகுடநிலா

98. சிவபெருமானை வழிபடச்செல்லும் பெண்கள் பிற பெண்களை எழுப்புவதற்காகப் பாடப்பட்ட நூல் ..........
   (A) திருவாசகம்
   (B) இறையனார் அகப்பொருள்
   (C) திருவெம்பாவை
   (D) திருக்கோவை

99. 'பொன்னகரம்' என்ற நூலின் ஆசிரியர் யார்?
   (A) மு. மேத்தா
   (B) இறையரசன்
   (C) புதுமைப்பித்தன்
   (D) மீரா

100. தளைகள் ............ வகைப்படும்.
   (A) ஏழு
   (B) ஆறு
   (C) நான்கு
   (D) ஐந்து

******